**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.வெ.மோனிகா, B.A., B.L., L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் வியாழக்கிழமை

**இ.பி.எண்.14/2026 அதன் அ.வ.எண்.67/2025**

ஊ.பரமகுரு .... மனுதாரர் / வாதி

/எதிர்/

மா.மதலேனாள் .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது 15.06.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.காமராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக உள்ள நிலையில், மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இந்த மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 34 மற்றும் பிரிவு 151 ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் அ.வ.எண்.67/2025 தாக்கல் செய்து, மேற்படி வழக்கானது விசாரணைக்கு பின்னர் மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக கடந்த 11.11.2025 ம் தேதி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை

பிறப்பிக்கப்பட்டுள்ளது மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் மனுதாரர் / வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் முன் சுவான்தாரருக்குரிய கிரைய ஆவண எண்.3076/1985 என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை சீர்திருத்தி 3078/1985 என்றும், எல்கை விபரத்தில் கிழக்கு பக்கம் மனை எண்.65 என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை சீர்திருத்தி 55 என்று சீர்திருத்தி கொடுக்க வேண்டுமெனக் கூறி இந்த நிறைவேற்றுதல் மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3. மேற்படி மனு சங்கதிகளை மறுத்திடும் வகையில், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாதரப்பினராக உள்ள நிலையிலும், கடந்த 11.11.2025 ம் பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக எதிர்மனுதாரர் / பிரதிவாதி நாளது தேதி வரை மேல் முறையீடும் தாக்கல் செய்யவில்லை என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேற்கண்ட தீர்ப்பாணையே இறுதியானது என தெரிய வருகிறது.

4. மனுதாரர் தரப்பு வாதுரையின் போது கட்டளை 21 விதி 34 ன் கீழ் ஒரு ஆவணத்தை இயற்றிக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பாணை வழங்கப்பட்டு இருந்தால், அதை தீர்ப்பு கடனாளி நிறைவேற்ற தவறும் பட்சத்தில் நீதிமன்றமே தீர்ப்பு கடனாளிக்கு பதிலாக மேற்படி ஆவணத்தினை இயற்றிக் கொடுக்க வழி வகை உள்ளது என்று வாதம் முன் வைக்கப்பட்டது.

5. இந்த நிறைவேற்றுதல் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்ப்பாணையில் தீர்ப்பு கடனாளி தீர்ப்பு தேதியில் இருந்து 2 மாத காலத்திற்குள் கிரைய ஆவண எண்.3076/1985 என்று தவறாக குறிப்பிட்டுள்ளதை சீர்திருத்தி 3078/1985 என்றும், எல்கை விபரத்தில் கிழக்கு பக்க மனை எண்.65 என்று

தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை சீர்திருத்தி 55 என்று சீர்திருத்தி கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனினும், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 21, விதி 34(1)ஐ ஆராய்ந்ததில் தீர்ப்பு கடனாளி ஒரு ஆவணத்தை இயற்றிக் கொடுக்க வழங்கியிருக்கும் தீர்ப்பாணையை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் அவருக்காக நீதிமன்றமே அந்த ஆவணத்தினை இயற்றிக் கொடுக்க அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

6. நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றம் அ.வ.எண்.67/2025–ல் 11.11.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு இந்த மனுவினை அனுமதிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அவ்வாறு, தீர்ப்பாணையில் கண்டவாறு மனுதாரர் / வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் முன் சுவாதன்தாரருக்குரிய கிரைய ஆவண எண்.3076/1985 என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை சீர்திருத்தி 3078/1985 என்றும், எல்கை விபரத்தில் கிழக்கு பக்கம் மனை எண்.65 என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை 55 என்று உள்ளதை எதிர்மனுதாரர் நிலையில் இருந்து இந்நீதிமன்றம் சீர்திருத்தி கொடுத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுப்பது தான் நீதியின் நலனுக்கும் சிறந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில், இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை. மேற்சொன்ன அனைத்து பொருண்மைகளையும் கருத்திற்கொண்டும், For production of draft rectification deed call on 07.09.2026.**

VENKATACHALAM MONIKA

Orders uploaded on 06.08.2026.
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.08.06 19:18:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

**மனுதார் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

**எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சி மற்றும் சாண்றாவணங்கள் – இல்லை**

VENKATACHALAM MONIKA
Orders uploaded on 06.08.2026.
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.08.06 19:18:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.பி.எண்.14/2026 அதன்**
**அ.வ.எண்.67/2025**

சீரான / வரைவு உத்தரவு
06.08.2026.